## 2.102 ஊராட்சி தேர்தல்கள் – ஊராட்சி அமைப்புகளுக்கான தேர்தல் பணிகளை கவனிக்க 384 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரு உதவியாளர் வீதம் பணியிடங்கள் தோற்றுவித்தல்

---

ஊரக வளர்ச்சி (ஊ.தே) துறை

அரசாணை எண். 187 நாள் : 10.6.1997

(1) 31.1.97 நாளிட்ட மாநில தேர்தல் ஆணையரின் கடித எண். 94/95

(2) ஊரக வளர்ச்சித் துறையின் 180 எண்ணும் 9.6.97 நாளும் இட்ட நிலை அரசாணை.

**ஆணை**

ஊராட்சி அமைப்புகளுக்கான தேர்தல் பணிகளை கவனிக்க ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும் ஒரு வட்டார வளர்ச்சி அலுவலர், உதவியாளர், தட்டச்சர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்களை தோற்றுவிக்குமாறு பார்வையில் கண்ட கடிதத்தில் மாநிலத் தேர்தல் ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டார்.

2. மேலே பத்தி 1–ல் உள்ள மாநில தேர்தல் ஆணையத்தின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து ஊராட்சி அமைப்புகளுக்கான தேர்தல் பணிகளை கவனிக்க , ஊராட்சி ஒன்றிய பணியமைப்பில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள இளநிலை உதவியாளர்கள் பணியிடங்களில் ஒன்றினை, உதவியாளர் நிலையில் ரூ. 1200–2040 சம்பள விகிதத்தில் நிலை உயர்த்தி 384 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வழங்கலாம் என்று அரசு முடிவு செய்துள்ளது.

3. அதன்படி, ஊராட்சி அமைப்புகளுக்கான தேர்தல் பணிகளை கவனிக்க ஊராட்சி ஒன்றிய பணியமைப்பிலுள்ள, இளநிலை உதவியாளர்கள் பணியிடங்களில் ஒன்றினை மட்டும் உதவியாளர் நிலையில் ரூ. 1200–30–1560–40–2040 என்ற சம்பள விகிதத்தில் நிலை உயர்த்தி 384 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வழங்கி அரசு ஆணையிடுகிறது. இவர்கள் அந்தந்த ஊராட்சி ஒன்றிய ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் பணியாற்றுவார்கள்.

4. இவ்வாணை நிதித் துறை அ.சா.கு. எண். 144/இ.செ.(எஸ்.எஸ்.ஆர்.)/97 நாள். 29.6.97 ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ் . நாராயண்**
அரசு செயலாளர்